DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Preliminary Register — Case No:CC.84 of 2017

Sessions

Deposition of Witness for PW 1

Name : திரு. சக்திவேல்

Age : 50

Father's/Husband's Name : பாலசுப்பிரமணியம்

Village : காந்திநகர்

Taluk : திருப்பூர்

Occupation : கட்டுமானத்தொழில்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of February 2020

முதல் விசாரணை: நாள்.27.02.2020

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கட்டுமானத்தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்துபோன சண்முகம் எனது அண்ணன். கடந்த 01.02.2017 அன்று அவினாசிபாளையம் பெட்ரோல் பங்க் அருகில் அதிகாலை 5.30 மணியளவில் அவர் வந்த காரும், மற்றொரு லாரியும் மோதி விபத்து ஏற்பட்டு அவர் இறந்துவிட்டதாக எனக்கு தொலைபேசி வழியாக தகவல் சொன்னார்கள். நான் சம்பவ இடத்திற்கு சுமார் 6 மணிக்கு சென்றுவிட்டேன். என் அண்ணன் வந்த கார் அதிகளவில் சேதம் ஏற்பட்டிருந்தது. விபத்து ஏற்பட்ட இடத்தை பார்த்தபாது அவர்கள் கிழக்கிலிருந்து மேற்காக வந்தபோது எதிரே சென்ற

லாரி சாலையின் வலதுபுறம் ஏறிவந்து விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். நான் சென்றபோதும் என் அண்ணன் மற்றும் அவரது டிரைவர் ஆகீயோரது உடல் அங்குதான் இருந்தது. இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டிருந்தார்கள். மேற்படி விபத்தை ஏற்படுத்திய லாரியின் பதிவு எண் எம் எச் 46 எச் 1525 ஆகும். என் அண்ணணின் காரின் பதிவு எண் டி என் 37 சிஜெ 4776 ஆகும். மேற்படி லாரியை ஓட்டி விபத்து ஏற்படுத்திய நபர் பெயர் ஜுடு மஜிலா என்று தெரிந்துகொண்டேன். காவல்நிலையத்தில் வைத்து பார்த்தேன். தற்போது நீதிமன்றத்திற்கு வந்திருக்கும் நபர் அவர்தான். பின்னிட்டு எனது அண்ணன் மற்றும் அவரது டிரைவரின் உடலுடன் மருத்துவமனை சென்றவிட்டு பின்னிட்டு காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகார் அ.சா.ஆ.1., போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

எனக்கு சம்பவம் பற்றி யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் சம்பவ இடத்திலிருந்த சேகர் என்பவர் போன் செய்து சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு வந்தபோது போலீசார் மற்றும் சேகர் ஆகியோர் அங்கு இருந்தார்கள் என்றால் ஆமாம். போலீசார் சம்பவ இடத்தில் என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம். போலீசார் என்னை மருத்துவமனை சென்றுவிட்டு பின்னர் வந்து புகார் கொடுக்கும்படி சொன்னார்களா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன் என்றால் ஆமாம். நான் மருத்துவமனைக்கு சென்றபோது நேரம் என்ன இருக்கும் என்றால் சுமார் 7 மணி இருக்கும். நான் காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு வந்து புகார் கொடுத்தேன். நேரம் சரியாக தெரியவில்லை, மருத்துவமனைக்கு சென்றுவிட்டு பின்னர் வந்து புகார் கொடுத்தேன். நான் நேரத்தை பார்க்கவில்லை. போலீசார்தான் எதிரியின் பெயரை சொன்னார்களா என்றால் ஆமாம். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை எதிரிதான் ஓட்டிவந்தார் என்று காவல்நிலையத்தில் சொன்னார்களா என்றால் ஆமாம். புகாரில் எதிரியின் பெயர் மற்றும் விலாசம் ஆகியவற்றை மட்டும்தான் போலீசார் சொல்லி தெரிந்துகொண்டேன். மற்ற விவரங்களை நான் சம்பவ இடத்தில் விசாரித்து தெரிந்துகொண்டேன். புகாருக்கு

பின்னிட்டு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் புகார்கொடுக்கும்போது விசாரித்தார்கள் அதன்பிறகு விசாரிக்கவில்லை.

மறு விசாரணை: இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்
பல்லடம்